ISSN:2582-9599



# சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்

**ச.ப.சத்தியப்பிரியா**
**உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,**
**சௌராஷ்டிர மகளிர் கல்லூரி,மதுரை-4.**
**shantrukan1986@gmail.com**

34

**ஆய்வுச் சுருக்கம்:**

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி என்று அனைவராலும் போற்றப்படும் தமிழ் மக்களின் பண்பாட்டை சிறப்பிக்கும் வகையில் திருவள்ளுவர் விருந்தோம்பல் என்று தனி அதிகாரம் படைத்து அதில் உள்ள 10 குறள்களில் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டுள்ளார். மேலும் சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டில் விருந்து பற்றிய செய்திகளும், விருந்தோம்பலின் சிறப்பும், விருந்தோம்புவர் மேற்கொள்ள வேண்டிய பண்புகள்,விருந்தோம்பும் முறைமை ஆகியவற்றை குறித்து ஆராய்வதாக கட்டுரையானது அமைகின்றது.

**முன்னுரை:**

பழங்காலத்தில் உணவு விடுதிகள் இல்லாத காலம் வெளியூர்க்குச் செல்வோர் பல நாடுகளுக்கு வேண்டிய உணவினை கொண்டு செல்ல இயலாது. அரசர்கள்,செல்வர்கள், வணிகர்கள் போன்றோர் மற்ற பகுதிகளுக்குச் செல்லும் பொழுது தேர் களிலும் மற்ற ஊர்திகளிலும் உணவிற்கு தேவையான பொருள்களை கொண்டு சென்றனர். மற்றவர்கள் உணவையோ உணவுப் பொருள்களையும் கொண்டு செல்ல முடியாத நிலையிருந்தது.அதனால் உணவின்றி வருந்துவோருக்கும் உணவு அருந்த வருபவர்களுக்கும் உணவளித்தல் இன்றியமையாத அறமாக போற்றப்பட்டது. தமிழர்களிடையே விருந்தோம்பல் பண்பானது சிறந்து காணப்பட்டது என்பதற்கான சான்றுகள் பல உள்ளன.

**விருந்தோம்பல் பொருள்;**

விருந்து என்பது புதுமை. புதிதாக வந்தவரை விருந்தினர் என்கிறோம். புதுமையாக செய்யப்பட்ட யாப்பை விருந்து என்கிறோம் ,என்பதனை

“விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே”
(தொல்செய்யுளியல்-231)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றது.

உறவினரும் நண்பரும் அல்லாதவரை புதியவராக நம்மிடம் வரும் மக்களை விருந்தினர் என்றனர் தமிழர். நம் வீட்டுக்கு வரும் ஒவ்வொரு உறவினர்களையும், நண்பர்களையும் புன் முகத்துடன் வரவேற்று இருப்பதைக் கொண்டு அன்புடன் மனதார செய்யும் உபசரிப்பு தான் விருந்தோம்பல்.

**விருந்தோம்பல் பண்பின் அடிப்படை;**

தமிழர் விருந்தோம்பல் பண்பின் அடிப்படையில் தனித்து=உண்ணாமை அமிர்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்: அத்தகையோரால் தான் உலகம் நிலைத்திருக்கிறது என்கிறார் கடலூர் மாய்ந்த இளம்பெறுவழுதி.

"உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிர்தம் இயைவதாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே…. …."[1] (புறநானூறு-182)

என்ற பாடல் வரிகள் மூலம் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பினை உணரலாம்.

**பதிற்றுப்பத்து;**

இமயவரம்பன் நெடுஞ்சேலாதனைக் குமட்டூர் கண்ணனார் பாடியுள்ள இரண்டாம் பத்தில் விருந்து பற்றிய செய்தி சிறப்பாக உள்ளது. தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் பிறர் என்று எண்ணாமல் பரிசில் வேட்ட நின்ற யாவரையும் என்றும் வயிறு பசி கூ ராதபடி பேரளவு செல்வத்தை நல்குவான் என்றும் கூறுகிறது. அப்படியே ஏனோர் பசிப்போக்கும் அவனை பெற்ற தாயின் வயிறு என்றும் குற்றமில்லாத ஆகுக என்று அவர்கள் வாழ்த்துகின்றனர் என்கிறார் குமட்டூர் கண்ணனார்.

"தண்ணியல் எழிலி தலையாயினும்
வயிறு பசி கூர வீயலன் வயிறு மா சீலியரவனீன்ற தாயே! [2]
( பதிற்றுப்பத்து 2-26-27)

என்ற வரிகள் இனிதே உணர்த்துகின்றன. பல யானைச் செல்கெழு குட்டுவனைப் பற்றி பாலை கவுதமனார் பாடியுள்ள மூன்றாம் பத்தில் விருந்து பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது.

"வருநர் வரையார் வார வேண்டி
விருந்து கண் மாற துணிய பாசவர்"[3]

(பதிற்றுப்பத்து 3:9-10)

குட்டுவன் நாட்டு ஆட்டு வணிகர் தம்மை நோக்கி வரும் விருந்தினர் குழைந்து வேறு இடம் பெயர்ந்து செல்லாதபடி முகத்தால் இனியவராய் வரவேற்கும் பாங்கு உடையவராய் இருந்தனர். என்று பாலைக் கௌதமனார் கூறுகிறார்.

**கலித்தொகை;**

கலித்தொகையில் மருதக் கலியுள் கடன் நமக்கு என்ற பகுதியில் விருந்து பற்றி செய்திகள் உள்ளது. கலி மருதக் கலி 10:18-19 இப்பாடலின் வரிகள் விருந்தினரை எதிர்கொண்டு வரவேற்பதால் ஒற்றனை மறவேன், யான் சோகமாக இருந்தாலும் விருந்தினரை எதிர்கொண்டு வரவேற்பேன் என்பதை விளக்குகிறது. விருந்தினர். விருந்தினர்களை எதிர்கொள்ளும் மற்றும் வரவேற்கும் தன்மையை கலித்தொகை விளக்கியுள்ளது .

"மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பி"[4] (கலி8:21)

என்னும் பாடல் வரியால் மன்னவனின் நல்லாட்சியில் தான் விருந்தினரை பேண முடியும் என்பதை அறிய முடிகிறது.

“தன் அருவி நறுமுல்லைப்
போது அரக் கொள்ளும் கமழ் குரற்கு என்னும்
தூது வந்தன்றே, தோழி!துயர் அரு கிழவியோடு;அயர்ந்தீகம் விருந்தே”[5]
(கலி32:16-9)

**புறநானூறு**

புறநானூற்றில் மொத்தம் 12 இடங்களில் விருந்து என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. பகற்பொழுதுக் கடந்து இரவு பொழுதில் தன் மனைவி (பாடினி)யுடன் வந்த முதியவரான பானனை ஓர் இல்லத்தரசி இன் முகத்துடன் வரவேற்று அப்பாணனையும், அவர் மனைவியையும் வீட்டின் உள்ளே அழைத்து விருந்தோம்பல் செய்கிறாள். என்பதை ஆலங்குடி வங்கனார் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

“பூவர் படுவீர் கூவல் தோண்டிய..
சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலோடு சென்றனன் வந்து நின்
பாடினி மாலை அணிய
வாடா தாமரை சூட்டுவேன் நினக்கே”[6] (புறநானூறு319)

இப்பாடலில் தமிழர்களின் விருந்தோம்பல் பண்புகளில் சில உயர்ந்த கொள்கைகளைக் காண முடிகிறது. பேரரசன் இரவலர்களை சிறப்பித்தல் போல சிற்றூர் மன்னனும் இரவலர் தகுதி அறிந்து பரிசு வழங்கும் திறன் இப்பாடலில் அறியப்படுகிறது.

“ஊன் முறை ஈத்தல் அன்றியும் கோள் முறை விருந்து
இறை நல்கியோனேன் அந்தரத்து
அரும்பெறல் அமிர்தம் அன்ன
கரும்பு இவன் தந்தோன் பெரும்பிறன் கடையே”[7]
(புறநானூறு392)

பல நாள் கடுப்பேறிக் கிடந்த கள்ளை உண்ணத் தந்தான். கோள்மீன் போன்ற ஒரு கிண்ணத்தில் தந்தான். உணவில் எதை முன்னர் உண்ண வேண்டும் எதைப் பின்னர் உண்ண வேண்டும் என்று (கொள் முறை) உட்கொள்ளும் முறை அறிந்து வரிசையாக அரசனே (இறை) உடனிருந்து வழங்கினான் என்று அதியமான் நெடுமான் அஞ்சி மகன் பொருட்டெழினியை ஔவையார் பாடியது.

“அவன் எம் இறைவன்: யாம் அவன் பாணர்
நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவால் வைத்தனைன்”[8] (புறநானூறு316)

பாணன் ஒருவன் மற்றொரு பாடலுக்கு தன் அரசனாகிய வல்லாளன் ஒருவனின் இயல்பை எடுத்துரைத்து அவனிடம் செல்லும்படியாக ஆற்றுப்படுத்துகிறான் என்பதனை மதுரை கள்ளிற் கடையந்தன் வெண்ணாகனார் பாடல் வரிகள் உணர்த்துகின்றது.

**அகநானூறு:**

அகநானூற்றில் உலோச்சனாரின் பாடல் வரிகள் விருந்தோம்பலின் சிறப்பினை விளக்குகின்றன.

"இல் உறை நல் விருந்தயர்தல் ஒல்லுதும்"[9] (அகம்300:21-22)

என்ற பாடல் வரியில் விருந்தோம்பலை விரும்பும் பெண்களின் மனநிலையை குறிப்பிடுகிறது.

"….,…… நெடுந்தொகை விருந்து ஏர் பெற்றனை"[10] (அகம்384:13-14)

என்ற பாடல் வரிகள் தலைவன் தன் மனைவியானவள் எப்போதும் விருந்தினரை வரவேற்று உபசரிப்பவள் என்றும்,அவர்களை வரவேற்று அமரச் செய்வதற்காக நிலத்தின் முன்னர் பந்தலிடப்பட்டுள்ளது என்றும் இயம்புகிறான்.என்பதனை ஒக்கூர் மாசாத்தியார் குறிப்பிடுகின்றார்.

**மலைபடுகடாம்:**

நன்னனுக்குரிய ஜவ்வாது மலையின் அடிவாரத்தில் இருந்த சிற்றூர்களில் வாழ்ந்த மக்கள் தினைச்சோற்றையும், நெய்யில் பெற்ற இறைச்சியையும் உண்டார்கள். அதை விருந்தினருக்கும் கொடுத்தனர் என்பதை,

"பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேலையோடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்"[11]

மலைபடுகடாம்168-169)

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது.

**பொருநராற்றுப்படை:**

கரிகாலன் தந்த மிகுதியான இறைச்சி உணவால் பொருநன் அவன் சுட்டதினராகியோருக்கு கொல்லையை உழுத கொழுப்போன்று பற்கள் மழுங்கிவிட்டன. அதனால் வான் உணவையே வெறுக்கின்ற நிலை ஏற்படுகின்றது என்பதனை,

"கொல்லை உழுகெழு ஏய்ப்ப பல்லே
எல்லையும் இரவும் ஊண் தின்று மழுங்கி
உயிர்ப்பிடம் பெறாது ஊண் முனிந்து ஒரு நாள்"[12]

{பொருநராற்றுப்படை(117-119)

சுற்றத்தரை உபசரிப்பதோடு மட்டுமல்லாமல் ஏழு அடி தூரம் நடந்து சென்று அவர்களை வழி அனுப்பினான். விருந்தினரை உபசரிப்பதில் கரிகாலன் சிறந்தவனாக கருதப்படுகிறான் என்று பெருவாயின் முள்ளியார் சிறப்பித்துக் கூறுகின்றார்.

வள்ளுவரும்,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" (குறள்90)

மென்மையான தன்மையை உடைய அனிச்சமலர் முகர்ந்த அளவில் தான் வாடும். மானமுடைய விருந்தினரின் முகமோ மாறுபடப் பார்த்த அளவிலேயே மாறிவிடும் என விருந்து உபசரித்தலை

எடுத்துரைக்கின்றது. வள்ளுவரின் வாக்கினை மிஞ்சிய அளவில் கரிகாலனின் விருந்தாள் பண்பு அளவிடற்கரியது.

**முடிவுரை:**

இன் முகம் காட்டி இன்சொல் கூறி விருந்தினர்களை வரவேற்க வேண்டும் என்றும், விடிந்தினருக்கு தமது இல்லத்தில் உள்ள உணவுப் பொருட்களையும் அவர்களுக்குத் தேவைப்படும் இன்ன பிற பொருள்களையும் இன்முகத்தோடு உவந்து அளித்து மகிழ்ச்சி அடைந்தனர். இத்தகைய பண்டைய காலத்து மக்களின் விருந்தோம்பல் பண்பு பிற்கால இலக்கியங்கள் ஆகிய நீதி இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள் போன்றவற்றிலும் நிறைந்துள்ளன என்பதை நாம் அவற்றை படிக்கின்ற போதே அறிந்து கொள்ள முடிகின்றது. விருந்தோம்பலின் முக்கிய நோக்கமே இக்காலத்தவரும் தங்களிடம் உள்ள பொருட்களை பிறருக்கு கொடுத்து அன்பு பாராட்டி மகிழ்வுடன் வாழ வேண்டும் என்பதே ஆகும்.

**துணைநூல் பட்டியல்:**

1. புலியூர் கேசிகன் -சங்க இலக்கியம் பதிற்றுப்பத்து,
கலித்தொகை,அகநானூறு- பதிப்பு-2013
2. தலைமை பதிப்பாசிரியர்கள்- முனைவர் ஆ.ம.பரிமணம்
முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்
புறநானூறு (மூலமும் உரையும்)
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை600098)
3.முனைவர் வி.நாகராசன் பத்துப்பாட்டு மூலமும் உரையும்
( பதிப்பு ஆசிரியர்கள்)முனைவர் ஆ.ம.பரிமணம்
முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை-600098